
# தூதன்

தூதன்-29 ஜனவரி - 2020 தூது-1

சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும்,
சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது. மத்தேயு 13:8




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 03 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி ஆயரம்மா மடல் – ஃபுஜைரா | 07 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 09 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 11 |
| செயலர் மடல் | 13 |
| புத்தாண்டு | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 15 |
| அறிந்து கொள்வோம் | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| எஸ்தர் | 22 |
| தெரிந்துகொள்வோம் | 24 |
| வேதவினா போட்டி | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary | 36 |
| Beersheba - Water city | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

அன்பிற்கினிய இறைமக்களே,

உலகமீட்பராம் இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள். 2020 புதிய ஆண்டின் மகிழ்வின் நாட்களில் நடந்து செல்லும் நல்லதோர் வாய்ப்பை பெற்றமைக்காக ஆண்டவருக்கு நன்றிகளைப் படைத்திடுவோம். கடந்த ஆண்டுகளில் நம்முடன் வாழ்ந்தவர்களில் பலர் இன்று நம்முடன் இல்லை. அவர்களைக் காட்டிலும் நாம் நீதிபரர் என்றோ, தூயவர் என்றோ, தகுதியுள்ளவர்கள் என்றோ நாம் எண்ணிட இயலாது. மாறாக என் அன்பு நிறைந்த ஆண்டவர் ஏதோ ஓர் சீரிய நோக்கத்துடன் எனது வாழ்நாளில் இந்தப் புதிய ஆண்டினை எனக்குக் கிருபையாய் தந்துள்ளார் என்ற எண்ணத்துடன், நன்றியுணர்வுடன் இப்புதிய ஆண்டிற்குள் நடந்திடுவோம்.

“கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்” ஓசியா 6:3

Let us press on to acknowledge him

“தொடர்ந்து செல்லுதல்” - விசுவாச வாழ்வின் உயிர்ப்புள்ள நிலையை வெளிப்படுத்துகின்ற அனுபவம். இதில் இரண்டு நிலைகள் உண்டு. 1.தொடருதல், 2.பின்பற்றுதல்- Following continually. சீடத்துவத்திலும், விசுவாசத்திலும் மிக முக்கியமானது இந்த இரு நிலைகள். இப்புதிய ஆண்டின் முதல் மாதத்தில் எலிசா-தீர்க்கரின் தொடர்ந்து பின்பற்றும் அனுபவத்தை தியானப்பகுதியில் நாம் இணைந்து கற்றுக்கொள்வோம்.

### 1. கர்த்தரின் வார்த்தையைத் தொடர்ந்து பின்பற்றுதல்:

மூத்த ஊழியராகிய எலியாவிற்கு கடவுளின் திருவாக்கு கூறிய செய்தி - உன்னுடைய ஊழியம் நிறைவுபெறப் போகிறது. அதற்கு முன்னர், உன்னுடைய இடத்தில் எலிசாவை அபிஷேகம் பண்ணு (1 இராஜா.19:16). அப்படியே எலியா, தன் சால்வையை எலிசாமேல் அடையாளமாய்ப் போட்டு இறை அழைப்பைத் தெரிவிக்கின்றார். அதன்பிறகு எலிசாவின் வாழ்வு முற்றிலும் மாற்றம் பெறுகிறது. ஒரு சாதாரண உழவனாக இருந்தவர் ஆண்டவரின் வாக்கை முற்றிலுமாய் நம்பி, அந்த வாக்கை முற்றிலுமாய் பற்றிக்கொண்டு எலியாவைத் தொடர்ந்து பின்பற்றுகிறார். இந்தப்பயணம் எலியா விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் தொடர்வதைத் திருமறையில் காணலாம்.

### 2. விசுவாசத்துடன் தொடர்ந்து பின்பற்றுதல்:

“எலிசா” யார்? அவரது பின்புலம் என்ன? சாதாரண உழவராய் இருந்தவரைக் கடவுளே எலியாவுக்கு அறிமுகப்படுத்துகிறார். எலியாவும் கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எலிசாவைத் தேடிச்சென்று இறை அழைப்பைத் தெரியப்படுத்த, அந்நேரம் முதல் எலிசாவின் ஊழியம் துவங்குகிறது. எலியாவுடன் இணைந்து பயணிக்கும் எலிசாவிற்கு, எலியா சுழல்காற்றில் எடுத்துக் கொள்ளப்படப்போகிறார் என்ற செய்தி கிடைத்தவுடன் எலியாவிற்குள் உள்ள ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ள விசுவாசத்துடன் பின்தொடருகின்றார். இந்த விசுவாச பின்தொடருதல் கில்கால், பெத்தேல், எரிகோ, யோர்தான் என்று அவர் சுழல் காற்றில் எடுத்துக்கொள்ளப்படும் வரையில் தொடர்கின்றது.

### 3. ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ள தொடர்ந்து பின்பற்றுதல்

எலிசாவின் - விசுவாச பின்தொடரும் பயணத்தில் பல்வேறுவிதமான இடர்பாடுகளையும், சோர்வுகளையும், சவால்களையும் தொடர்ந்து எதிர்கொண்டாலும் அவைகளையெல்லாம் பொருட்டாக எண்ணாமல் தான் அடையவேண்டிய இலக்கை மாத்திரம் மனதில் கொண்டு விசுவாச உறுதியுடன் தன் குருவாகிய எலியாவைப் பின்தொடர்ந்து சென்று கொண்டே இருக்கிறார். எந்தவிதமான கால நிர்ணயமும் இல்லாமல், எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படப் போகின்றார் என்ற அடையாளமும் கிடைக்காமல், எப்படியாகிலும் இந்த இரட்டிப்பான கிருபையை என் ஊழியத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற முனைப்புடன் பயணித்து நிறைவாக எலியாவினுள் இருந்த அந்த ஆவியின் வரத்தை இரட்டிப்பாகப் பெற்றுக்கொள்கிறார்.

இப்புதிய ஆண்டில் ஆண்டவரையும் அவரது கிருபைகளையும் பெற்றுக்கொள்ள அவரது வார்த்தையை விசுவாசத்துடன் பற்றிக்கொண்டு, இரட்டிப்பான கிருபைகளைப் பெற்றுக்கொள்ள தொடர்ந்து பயணிப்போம் வாருங்கள்.

ஆண்டவரின் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

ஆண்டவரின் தொடர்பணியில்<br>
உங்கள் ஆயர்<br>
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# ஆயரம்மா மடல்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே 2020 இந்தப் புதிய வருடத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இந்தப் புதிய ஆண்டு உங்கள் அனைவருக்கும் புதிய நன்மைகள், புதிய கிருபைகள், புதிய ஆசீர்வாதங்களைக் கொடுக்க எல்லாம் வல்ல நம் ஆண்டவரை வேண்டிக் கொள்கிறேன்.

இந்த உலகத்தில் வாழும் மக்கள் அனைவரும் இந்தப் புதிய ஆண்டில் புதிய புதிய எதிர்பார்ப்புகளை எதிர்நோக்கி இருப்பார்கள். ஆனால் UAE நாட்டில் வாழும் நாமும் ஒரு பெரிய எதிர்பார்ப்போடு இருக்கிறோம். அதிலும் குறிப்பாக economic condition மாறுமா, மாறாதா என்று business மக்கள் ஒரு எதிர்பார்ப்போடு காத்து உள்ளனர். பலரும் பலவிதமான எதிர்பார்ப்புகளோடு இந்த வருடத்தை எதிர்நோக்கிக் காலடி எடுத்து வைத்துள்ளோம். ஆண்டவரை அறியாத மக்களுக்கு ஒருவிதமான எதிர்பார்ப்பு. ஆண்டவரை மாத்திரம் நம்பி இருக்கும் நமக்கு வேறுவிதமான எதிர்பார்ப்பு. இந்த இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. நாம் ஆண்டவரை நம்பி, அவரை மாத்திரம் பற்றி இருக்கும்போது அதன் ஆசீர்வாதமே தனி.

கிறிஸ்துவின் பிறப்பில் எப்படி ஒரு சமாதானம், ஒரு மகிழ்ச்சி, ஒரு கொண்டாட்டம் இருந்ததோ அதைப்போல் அவரைச் சார்ந்து இருக்கும்போது மாத்திரம் இவைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்துவைச் சார்ந்து இல்லாமல் இருந்தால் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க முடியாது.

இந்தப் புதிய வருடத்தில் ஏசாயா 61:9 திருமறைப்பகுதியில் வாசிக்கின்றவண்ணம், அவர்களை (நம்மைப்) பார்க்கிற யாவரும் அவர்கள் (இவர்கள்) கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததி என்று அறிந்து கொள்வார்கள். இப்படிப்பட்ட ஆசீர்வாதம் கர்த்தரை நம்புகிற நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்க ஆண்டவரை வேண்டுகிறேன்.

ஆண்டவரைச் சார்ந்து இல்லாமல், அவரைப் பற்றிக் கொள்ளாமல் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே இந்தப் புதிய வருடத்தில் இப்படிப்பட்ட ஆசீர்வாதம் பெறத் தடை நம்மில் உண்டா என்று ஆராய்ந்து பார்த்து அவற்றை ஆண்டவர் பாதத்தில் வைத்து, புதிய வருடத்தில் புதிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம்.

உபாகமம் 26:18b நீ என்னுடைய கட்டளைகளை எல்லாம் கைக்கொண்டால் எனக்குச் சொந்த ஜனமாய் இருப்பாய். கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த கட்டளை, புதிய இஸ்ரவேலராகிய நமக்கும் அது பொருந்தும். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நன்மையை வைத்துள்ளார். அதைச் சுதந்தரித்துக் கொள்வது நம்முடைய கரத்தில் உள்ளது.

நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும் புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும், மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்று கர்த்தர் நமக்கு வாக்குப் பண்ணி இருக்கிறார் (உபா. 26:19). இதை நாம் வாசிக்கிறோம். நாம் பரிசுத்தமாய் இருக்கும்போதுதான் ஆண்டவர் நமக்கு இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைத் தருவார். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் நம்மை தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆண்டவரைச் சார்ந்து நிற்காமல், ஆண்டவரைப் பற்றிக் கொள்ளாமல் இந்த ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே நம்மை நாம் இந்தப்புதிய வருடத்தில், இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களுக்குத் தடையாய் என்னிடத்தில் என்ன குறைவு உண்டு என்று ஆராய்ந்து பார்த்து, அவற்றை ஆண்டவர் பாதத்தில் அறிக்கை செய்து புதிய வருடத்திற்குரிய நன்மையை நாம் சுதந்தரித்துக் கொள்ளுவோம்.

இந்தப் புதிய ஆண்டு 2020 மற்ற மக்களுக்கு எப்படியோ? ஆனால் ஆண்டவரை நம்பி இருக்கும் பிள்ளைகளுக்குச் சகலமும் நன்மையாக முடித்துத் தருகிறார்.

நாம் நம்முடைய நிலையில் இருந்து எப்படி இந்த ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க போகிறோம் என்பதை நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து இந்த வேளையில் நம்மை தகுதிப்படுத்திக் கொள்வோம்.

இந்தப் புதிய வருடம் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமான வருடமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

Wish you all success in this New year 2020

கிறிஸ்துவின் பணியில்
திருமதி.மேரி உமா விக்டர்
ஆயரம்மா.

# உதவி போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! அனைவருக்கும் என்றென்றைக்கும் நம்மோடிருக்கும் இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் 2020-ம் ஆண்டு புதுவருட ஸ்தோத்திரங்களைக் கூறிக்கொள்ளுகிறன். கடந்த வருடம் முழுவதும் நம்மைக் கண்மணிபோலப் பாதுகாத்து நடத்தி வந்த நம் தேவாதி தேவன்தாமே இந்தப் புதிய வருடத்திலும் நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

## கர்த்தர் உங்கள் முன்னே போவார்

"கர்த்தர் உங்கள் முன்னே போவார்" ஏசாயா 52:12

அடர்ந்த காடு ஒன்றில் வழி தவறி மாட்டிக்கொண்டார் ஒருவர். அங்குமிங்குமாக அலைந்து திரிந்த அவர் காட்டிற்கு வெளியே செல்லமுடியாமல் அவதிப்பட்டார். எங்கு பார்த்தாலும் சிறு செடிகள், பெரிய மரங்கள், அடர்ந்த புதர்கள், வழியே காணப்படவில்லை. கடைசியில் ஒரு காட்டுவாசிகள் கிராமத்தைச் சென்றடைந்தார். அவர் அங்குள்ள காட்டுவாசிகளிடம், தான் இந்தக் காட்டைவிட்டு வெளியேற உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அங்குள்ள காட்டுவாசிகளில் ஒருவன் அவருக்கு உதவிசெய்ய முன்வந்தான். இருவரும் அடர்ந்த காட்டின் வழியே மணிக்கணக்கில் நடந்தனர். சாலையோ, வழியோ இல்லை. புதர்கள், செடிகள் ஊடே நடந்தனர். இதைக்கண்டு அந்த நபருக்கு மனச்சோர்வு உண்டாகி, அந்தக் காட்டுவாசியிடம் இங்கு பாதையே கிடையாதா, இப்படிப்போனால் நாம் எப்படி வெளியே செல்வது என்று கேட்டார். அதற்கு அந்தக் காட்டுவாசி மனிதன் சொன்னான், இங்கு நான்தான் பாதை, நான் உனக்கு முன்னே செல்லுகிறேன் அல்லவா நீ வெறுமனே, அமைதியாக என்னைப் பின்பற்றி வா என்றான்.

அன்புக்குரியவர்களே! இந்த உலகமும் ஒரு அடர்ந்த காடுதான். நாம் நடக்க வேண்டிய வழி நமக்குத் தெரியாது. ஆனால் நமக்கு முன்னே எல்லாவற்றையும் அறிந்த நம் கர்த்தாதி கர்த்தர் செல்லுகிறார். எனவே நாம் கவலை கொள்ளவோ, பயம் கொள்ளவோ தேவையில்லை. நாம் பிரவேசித்திருக்கிற இந்தப் புதிய வருடம் 2020 நமக்குப் புதிதானதே. இதற்கு முன்பு இந்த வருடத்தில் நாம் வந்ததில்லை. ஆனால் காலங்களின் தேவன் நமக்கு முன்னே சென்று அவரது நேர்த்தியான பாதையிலே நம்மை நடத்திச் செல்லுவார்.

### 1.முற்பிதாக்களின் தேவன் நமக்கு முன்னே போவார்:

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற நம் முற்பிதாக்களின் தேவன் நமக்கு முன்னே போவார். அன்றைக்கு இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்தபோது அவர்களை அவ்வடிமைத்தனத்திலிருந்து ஆச்சரியமாய் விடுவித்து மோசே என்ற மனிதன் மூலமாய் தேவன் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் நடத்திச் சென்றார். அந்த மோசேயை தேவன் அழைத்தபோது அவருக்குத் தரிசனமான வேளையிலே தன்னை முற்பிதாக்களின் தேவனாகவே மீண்டும் மீண்டும் அறிமுகம் செய்கிறார் (யாத்திராகமம் 3:6, 13, 15, 16, 4:5). பின்பு ஆச்சரியவிதமாய் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்திலே அவர்களுக்கு முன்பாகச் சென்று வழிநடத்தினார். பகலிலே மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினிஸ்தம்பமாகவும் அவர்களுக்கு முன்சென்றார். அதே தேவன் இன்றும் நமக்கு முன்சென்று நம்மை வழிநடத்துவார்.

### 2. மோசேயின் தேவன் நமக்கு முன்னே போவார்:

இஸ்ரவேல் மக்களை வழிநடத்திய மோசே மரித்துப்போனான். ஆனால் இஸ்ரவேலரின் விடுதலைப் பயணம் தடைபடவில்லை. ஏனென்றால் மரித்துப்போனது மோசேதானேயன்றி மோசேயின் தேவனில்லை. பின்பு யோசுவா என்ற மனிதனைக்கொண்டு இஸ்ரவேலரை வழிநடத்திச் சென்றார். அன்பானவர்களே! மோசேக்கள் மரிக்கலாம், யோசுவாக்களும் மரிக்கலாம். ஆனால் மோசேயின் தேவனும், யோசுவாவின் தேவனுமான நம் தேவாதி தேவன் ஒருநாளும் மரிப்பதில்லை. அவர் என்றும் நமக்கு முன்னே போய் நம்மை ஆசீர்வதித்து நடத்துவார்.

அன்புக்குரியவர்களே! புதிய ஆண்டிற்குள் பிரவேசித்துள்ள நாம் கவலை கொள்ளவேண்டாம். ஐயோ எனக்கு யாருமில்லையே, நான் நம்பியிருந்தவர்கள் என்னைக் கைவிட்டுவிட்டார்களே எனத் திகைக்க வேண்டாம். நம் நம்பிக்கையின் தேவன் நமக்கு முன்னே சென்று கோணலானவைகளைச் செம்மையாக்கி, நம் பாதைகளைச் சீர்படுத்தி, நம்மை நல்வழிகளில் நடத்திச் செல்வார் என்கிற நம்பிக்கையோடே புதிய ஆண்டுக்குள் நுழைவோம்.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து நடத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ∴.புஜைரா.

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

என்றென்றும் மாறாத ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த வருடம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து நடத்தி வந்த நம் கர்த்தாதி கர்த்தர் நாம் பிரவேசித்திருக்கிற இந்தப் புதிய 2020-ம் ஆண்டிலும் நம்மைப் பாதுகாத்து ஆசீர்வதித்து நடத்துவாராக. அனைவருக்கும் அன்பின் புதுவருட வாழ்த்துக்களைக் கூறிக் கொள்ளுகிறேன்.

## புதுபெலன்

"கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்,... சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்." சங்கீதம் 29:11

கி.பி. 306-ம் ஆண்டு, ரோம சாம்ராஜ்யத்தின் அரியணை ஏற கான்ஸ்டாண்டைன், லிசினியிஸ் மற்றும் மேகஸண்டியஸ் ஆகியோர் போட்டி போட்டு போரிட்டுக் கொண்டிருந்தனர். ஒரு இரவு இந்த வாரிசுரிமைக்கான போர்க்களத்தில், கான்ஸ்டாண்டைனின் படைகள் பின்வாங்கிக் கொண்டிருந்தன. அவன் தனது அரியணைக் கனவை இழந்துவிடும் சூழலில் நின்றுகொண்டிருந்தான். அன்று இரவில் அவனது கனவில் படத்தில் காணும் அடையாளத்தைக் கண்டு,



"இந்த அடையாளத்தினால் நீ வெற்றி பெறுவாய்" என்று கூறிய குரலையும் கேட்டான். சோர்ந்துபோய் இருந்த அவனுக்குள் இந்த தரிசனம் புது உத்வேகத்தைத் தந்தது. இரவோடு இரவாக இந்த அடையாளத்தைத் தனது போர்ச்சேவகர்களின் பட்டயங்களிலும், கேடகங்களிலும் பதித்து மறுநாள் ஒரு புதிய வேகத்துடன் போருக்குச் சென்றான். ஆச்சரியவிதமாக அந்நாளின் போரில் வெற்றிபெற்று சக்கரவர்த்தியானான். பின்னர் அந்த அடையாளம் "கிறிஸ்தவர்களின் அடையாளம்" என்பதை அறிந்து, உடனே கிறிஸ்தவத்தைத் தனது அரச சமயமாக அறிவித்தான். அதுவரை பாடுகளிலும், உபத்திரவங்களின் வழியாகவும் கடந்து வந்த கிறிஸ்தவர்கள் கான்ஸ்டாண்டைன் ஆட்சியில் விடுதலை வாழ்வைப் பெற்று சமாதானமாய் வாழ்ந்தனர் என்பது வரலாறு.

சோர்ந்துபோய் வாழ்வு முடிந்துவிட்டது என்ற நிலையிலிருந்த கான்ஸ்டாண்டைனுக்குப் பெலன் கொடுத்த ஆண்டவர், இன்றும் நம் ஒவ்வொருவருக்கும் பெலன் கொடுக்கப் போதுமானவர். அவர் சோர்ந்து போகிறவனுக்குப் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெறுகப் பண்ணுவார் (ஏசாயா 40:29). இத்தனை ஆண்டுகள் கடந்துவிட்டதே, என் வாழ்வில் ஒரு முன்னேற்றமும் இல்லையே என சோர்ந்து போயிருக்கின்ற ஒவ்வொருவருக்கும் நம் தேவன் இந்தப் புதிய ஆண்டிலே புது பெலன் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். நாம் அவரது ஜனங்களாக இருப்போமானால் நிச்சயம் அவர் நமக்கு ஏற்ற வேளையில் பெலன் தருவார். அதுமாத்திரமல்ல அவர் நமக்கு சமாதானத்தையும் அருளுவார். ஒருவித கலக்கத்தோடும், பயத்தோடும் புது வருடத்திற்குள் நாம் பிரவேசிக்க அவசியமில்லை. ஏனென்றால் கர்த்தர் தம் ஜனத்திற்குப் பெலனும், சமாதானமும் கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறார். எனவே புது நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் இப்புதிய வருடத்துக்குள் பிரவேசிப்போம்.

கர்த்தர் பெலனும், சமாதானமும் அருளுவாராக.

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி. ஏஞ்சலின் ரூபா ஜான் வெஸ்லி
உதவி போதகரம்மா - ∴.புஜைரா.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Baby Girl

D/o.Mr.S.Christopher & Mrs. T.Sathiya Vinodha

09-12-2019

Isha Rachel

D/o.Mr.Immanuel Ramesh & Mrs. Chandrakala

10-12-2019

# உதவி போதகர் மடல்

புதுவருடமாகிய 2020-ம் ஆண்டிற்குள் பிரவேசிக்க கிருபைபுரிந்த இயேசுகிறிஸ்துவாகிய இரட்சகரை ஸ்தோத்தரிக்கிறன். நன்றி சொல்லுகிறேன். புத்தாண்டின் வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் மிக மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன். உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நாளும் நன்மைகளை வழங்கி கர்த்தர் ஆசீர்வதிப்பாராக என்று வாழ்த்துகிறேன்.

கர்த்தருடைய வசனத்தை ஜெபத்துடன் தியானிப்போம்.
தியான வசனம் : யாத்திராகமம் 33:14
"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்"
'My presence will go with you'

இஸ்ரவேல் மக்களை வழிநடத்தின மோசே, ஆண்டவரே உமது வழிகளை எனக்குக் காட்டியருளும் என வேண்டுதல் செய்தார். அதற்கு கர்த்தர் "என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்" என பதிலளித்தார். அதற்கு மோசே உம்முடைய சமூகம் என்னோடே கூட செல்லாமறபோனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும் (யாத்.33:15) என வேண்டிக் கொண்டார். இது கர்த்தரின் வழிநடத்துதல் இல்லாமல் வாழ்வின் பயணத்தினை தொடரமுடியாது எனும் நிலையினை உணர்த்துகிறது. மோசேயின் வேண்டுதலுக்குக் கிடைத்த பதில், நமது தொடர் வாழ்வில் கர்த்தர் நம்மையும் நடத்துவார் என்பதை உணர்த்துகிறது.

எவ்விதங்களில் கர்த்தர் நம்மை அறிந்து வழிநடத்துகிறார் என்பதினை தொடர்ந்து தியானிப்போம்.

1.கர்த்தர் முன் செல்கிறார் (யாத். 33:14) "என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்" 'My presence will go with you'

இறைப்பிரசன்னம் முன் செல்கையில் பின்தொடர்பவர்களுக்கு பயம் இல்லை. பயணத்தின் இடையில் எதிரிடும் தடைகளை தகர்ப்பதற்கும், எதிரிகளின் தாக்குதலிலிருந்து காப்பதற்கும், செவ்வையான பாதையில் செல்வதற்கும் இறைப்பிரசன்னம் முன்செல்லும் என்கிறார். பாபிலோன் சிறையிருப்பில் வேதனையுற்று எருசலேமுக்குத் திரும்பிவரும் எண்ணத்தோடிருந்த மக்களுக்கு "நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்" எனும் நம்பிக்கையினைத் தருகிறார் (ஏசாயா 45:2). வாழ்நாட்களில் அடுத்த நாளையாவது, நிமிடத்தையாவது அறிந்திராத நம்மை இறைப்பிரசன்னம் ஆட்கொண்டு, நமக்கு முன் செல்லுமாயின் எத்தனை மகிழ்ச்சி. இறைப்பிரசன்னத்தில் அமர்ந்திருக்கும் நாம் இதன் தொடர்வழி நடத்துதலோடு இவ்வருடத்தின் நாட்களைத் தொடர்வோம்.

2. கர்த்தர் கிருபை அருள்கிறார் (யாத்.33:17) "என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது" 'I am pleased with you'

முன் செல்லும் ஆண்டவர் கிருபை அருளுகிறார். கர்த்தரின் கிருபையை எதிர்நோக்கியிருந்த மோசேக்கு, என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது என்கிறார். எங்கெல்லாம் இயலாமை நம்மை ஆட்கொள்கிறதோ, எப்போதெல்லாம் நாம் பெலவீனப்படுகிறோமோ, எவ்விடத்திலெல்லாம் நாம் உதாசீனப்படுத்தப்படுவோமோ அங்கே இறைவனது கிருபை நம்மை ஆட்கொள்கிறது.

தாழ்மை நிலையில் இருந்த மரியாளுக்கு கர்த்தர் கிருபையை அளித்து ஆசீர்வதித்தார் (லூக்கா 1:28). இயலாமையில் தன்னை ஆண்டவருக்கு முன்பாகத் தாழ்த்தின ஆயக்காரனுக்குக் கர்த்தர் கிருபை அருளினார். 'God have mercy on me, a sinner.' (லூக்கா 18:13). தூய பவுல் தனது பெலவீனம் நீங்கும்படியாக மூன்றுமுறை கர்த்தரிடம் விண்ணப்பம் செய்தார். பெலவீனத்தைத் தாங்கக்கூடிய கிருபையை கர்த்தர் அருளினார். "என் கிருபை உனக்குப் போதும், பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார். இவ்வாறாக, இறை அருளால் கிருபையின் மேல் கிருபை பெற்றோம் என யோவான் 1:16-ல் கூறுவதைக் காணலாம். புதிய வருடத்தின் ஒவ்வொரு நாளும் இறைஅருள் நம்மை ஆட்கொள்ள கர்த்தரிடம் நம்மை ஒப்படைப்போம்.

3. கர்த்தர் பெயரிட்டு அறிகிறார் (யாத். 33:17b) "உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன்" "I know you by name"

முன் செல்லும் கர்த்தர் பெயர் சொல்லி அழைக்கின்றார். நாம் நம்மைக் குறித்து அறிந்தவர் எவரும் இலர் என நினைக்கிறோம். ஆனால் நமது கர்த்தர் நம்மை, "அறிந்து பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் ஆண்டவராகிய கடவுள் நானே" என்கிறார் (ஏசாயா 45:3). யோவான் நற்செய்தியாளர், கர்த்தரை மேய்ப்பராகக் கண்டு ஆடுகளாகிய தம் அடியவரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுபவராகவும், ஆடுகளை அறிந்தும் ஆடுகளால் அறியப்பட்டும் இருக்கிறவராகக் குறிப்பிடுகிறார் (யோவான் 10:2,15). இறை அன்பை உணர்ந்து, பெயர் சொல்லி அழைக்கும் அவர் பின்செல்வோம்.

நமது வாழ்வின் ஒவ்வொரு நாளும், இயேசு இரட்சகர் நம்முன் சென்று பாதைகளைச் செவ்வைப்படுத்தி, நமக்குக் கிருபை அருளி, நம்மைப் பெயர் சொல்லி அழைத்து, ஆசீர்வாதத்துடன் நடத்துவாராக.
கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

கர்த்தரின் திருப்பெயருக்கு மாட்சிமை உண்டாவதாக. புதுவருடமாகிய 2020-ம் ஆண்டினைக் காணக்கிருபை செய்த கர்த்தரை ஸ்தோத்தரித்து, அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறுகிறேன்.

தியான வசனம்

"என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்"

"I will uphold you with my righteous right hand" (ஏசாயா 41:10)

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட போர் அபாயங்கள், சிறையிருப்புச் சூழ்நிலைகள் இவற்றால் சோர்வுற்றிருந்தனர். அவர்கள் வாழ்வில் பயங்கரமான அழிவுகளும், அடிமைத்தனம் நிறைந்த வாழ்வாகவே அமைந்திருந்தது. இதனால் கவலையோடு காணப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து பயப்படவேண்டாம் என்று கூறி திடப்படுத்தி தமது கரத்தினால் தாங்குவேன் என கர்த்தர் தேற்றுகிறார். புதிய ஆண்டில் பயத்தோடும், நடுக்கத்தோடும் இருக்கும் அனைவரின் பயம் அகற்றி, புது பெலன் தந்து வலதுகரத்தால் தாங்கி வழிநடத்துகிறார் என்பதைத் தியானிப்போம்.

1.பயம் அகற்றி உடனிருப்பவர் (ஏசாயா 41:10a) "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்" : இஸ்ரவேல் ஜனங்கள் பல்வேறு வேதனையான அனுபவங்களால் கலக்கத்தோடு வாழ்ந்தவேளை, கர்த்தர் பயப்படாதேயுங்கள் என்று கூறி தேற்றினார். மானிடர் வாழ்வில் பயம் நிறைந்த சூழல் ஏற்படுவதுண்டு. அப்படிப்பட்ட சூழல்களில், "பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்" எனக்கூறி ஆற்றல்படுத்துவார் என்பதை திருமறை வசனங்கள் வழியாய் அறிந்துகொள்ள முடிகிறது. கர்த்தர் ஆபிரகாமை அழைத்து, புது வாழ்வுக்கு நேராய் வழிநடத்தும்போது "ஆபிரகாமே, நீ பயப்படாதே" (ஆதியா.15:1) என்று சொல்லி தேற்றினார்.

இயேசுவின் பிறப்பிலும் (லூக்கா 1:30), இயேசுவின் உயிர்ப்பிலும் (மாற்கு 16:6) பயத்துடன் காணப்பட்டவர்களின் பயம் அகற்றப்பட்டது. சங்கீதக்காரனாகிய தாவீது, ஆண்டவர் தமது பயத்தை அகற்றினார் என்று கூறுகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக, "உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27) Do not let your hearts be troubled and do not afraid என்று கூறி ஆற்றல் அருளிய இயேசு நம்முடன் இருந்து பயம் அகற்றி வாழ்வளிக்க வல்லவராய் இருக்கிறார். பயமகற்றும் இயேசுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு வாழ்வோம்.

2. பலப்படுத்தி சகாயம் அருள்பவர் (ஏசாயா 41:10c) "நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்" : துன்ப சூழலில் தனித்து விடப்பட்டிருக்கும் நேரத்தில் யாராவது உதவி செய்யமாட்டார்களா என்று ஏங்கி நிற்பதுண்டு. அப்படிப்பட்ட நேரத்தில் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு உதவியருள்வதாக வாக்கு அருளியுள்ளார். தாவீது தனக்கு நெருக்கடியான சூழல்களில் கர்த்தர் உதவியருளினார் (சங்கீதம் 30:9) என்று குறிப்பிடுகிறார். யோபு பக்தர் வாழ்வில் வேதனையின் மிகுதியால் சகாயம் என்னைவிட்டு நீங்கிற்றே எனப் புலம்புகிறார் (யோபு 6:13). கர்த்தர் சகாயராய் இருந்தபடியால் ஆசீர்வதிக்கப்பட்டார். இந்த உலக வாழ்வில் கர்த்தர் நமக்கு சகாயராய் இருக்கும்போது வாழ்வில் கலக்கமடைய வேண்டியதில்லை. "கர்த்தர் எனக்குச் சகாயர்" (எபிரெயர் 13:6) "The Lord is my helper" (Hebrews 13:6) என்ற வசனத்தின்படி எல்லாச் சூழலிலும் இயேசுகிறிஸ்து நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். நம்மைப் பலப்படுத்தி சகாயம் செய்யும் இயேசுவின் கரம் பற்றி முன்னேறுவோம்.

கர்த்தரின் கரத்தின் ஆற்றலை திருமறை தெளிவாகப் போதிக்கிறது. கர்த்தரின் கரம் அனைத்து படைப்புகளுக்கும் ஆதாரம் (சங்.9:1), இஸ்ரவேலருக்கு விடுதலை அளித்தது (உபா.5:15). இயேசு தமது கரத்தை நீட்டி, தொட்டு அநேகருக்குச் சுகமளித்தார். அவரது தொடுதலினால் அநேகர் புதுவாழ்வு பெற்றனர். பேதுரு கடலில் அமிழ்ந்து போகும்போது கரம் நீட்டித் தூக்கியது போன்று நமது வாழ்வில் எதிரிடையான அனுபவங்களால் வீழ்ந்துபோகாமல் அவரது கரம் நம்மைத் தாங்குகின்றது. நாமும் இயேசுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு வாழ்வோம்.


கிறிஸ்துவின் பணியில்

திருமதி. J.விஜிலா ராணி

உதவி ஆயரம்மா - RAK.


## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபை அங்கத்தினர்

Mr. Jeba Sundara Ruban அவர்களின் தாயார்

Mrs. Natchathiram Swamydhas அவர்கள் கடந்த 20-11-2019 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# செயலர் மடல்

சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்து முடித்து, நம் ஆலோசனைகளையும், நடைகளையும் உறுதிப்படுத்தி இன்னும் ஒரு புதிய வருடத்தைக் காணச் செய்த நம் உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு துதிகளையும், கனத்தையும், மகிமையையும் செலுத்துகிறேன். இப்புத்தாண்டு 2020 நம் அனைவருக்கும் உலகம் கொடுக்கக்கூடாத கிறிஸ்துவின் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

கடந்த மாதத்தின் பண்டிகைக் காலங்களை கிறிஸ்துவுக்குள்ளாக பரிபூரணத்தோடு கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்பி தேவனைத் துதிக்கிறேன். டிசம்பர் 5-ம் தேதியன்று நமது முகாம் சகோதரர்கள் DIP பகுதியில் நமது சபை போதகர் Rev. Victor Premkumar அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் மரவிழா நடத்தி மகிழ்ந்தார்கள்.

டிசம்பர் 6-ம் தேதியன்று கிளைச்சபையான ஃபுஜைரா திருச்சபையின் அறுப்பின் பண்டிகை மிகச் சிறப்பாக நடைபெற்றதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். நம்முடைய வருடாந்திர Christmas Carol டிசம்பர் 9-ம் தேதியன்று சிறப்பாக நடைபெற்றது. நமது திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் டிசம்பர் 13-ம் தேதியன்று ஆலய ஆராதனையில் கிறிஸ்மஸ் கால சிறப்பு பாடல்களைப் பாடி நம்மை மகிழ்வித்தார்கள். அதேநாளில் நம்முடைய வருடாந்திர Christmas Tree Function Bilva Indian School-ல் சிறப்புற நடைபெற்றது.

நமது கிறிஸ்மஸ் ஆராதனை மற்றும் பழைய, புதிய வருட ஆராதனைகளை Rev. Victor Premkumar அவர்கள் தேவனுடைய மனித அவதாரத்தின் மகிமையையும், பழைய வருட துதி ஆராதனையும், புதிய வருட உடன்படிக்கை ஆராதனையும் சிறப்பாக வழிநடத்தினார்கள். நமது கிளைச்சபைகளிலும் பண்டிகைக்கால சகல நிகழ்வுகளும், ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன்.

உங்கள் ஜெபங்களில் இம்மாதத்தில் நடைபெறவிருக்கும் அனைத்து நிகழ்வுகளுக்காகவும், நமது திருச்சபைக்காகவும், திருச்சபையின் ஊழியங்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

Babu Jeyaseelan, Secretary.

# புத்தாண்டு

இருபது இருபது ஆண்டாச்சி
இறையருள் நிறைவுறக் கண்டாச்சி
வரங்களும் திறங்களும் மீண்டாச்சி
வருவது வரலாறு கொண்டாச்சி

பலரகம் பலகாரம் கலக்கலாச்சி
சமைப்பதில் இருஉயிர் ஒருமுயற்சி
விலையிலா அன்பு ! அம்மா அப்பாவாச்சி
வளர்திறன் காங்ரீட் கோபுரமாச்சி

மனம்ஒத்து மனிதராய்ச் சேர்ந்தாச்சி
நண்பரும் சுற்றமும் சூழ்ந்தாச்சி
இணைந்த இதயங்களுள் இன்பஆட்சி
எதிர்காலம் எதிரிலே பிரகாசிச்சி

சபையிலே கைகுலுக்கும் சமயமாச்சி
சந்தேக பயத்திலே ஆயுதங்குவிச்சி
சுயத்திலே தோன்றவேண்டும் அன்புமுயற்சி
துளிவிசம் ! மறைத்த மனமிரட்சி !!

கணக்கிலை எண்திசையும் ஆயுதமாச்சி
கடலும் ஆழமும் குவியலாச்சி
கணிப்பொறி லேசருடன் குறிவச்சாச்சி
மின்காந்த அலைவீச்சி காவலாச்சி

உலகிலே ஒருநிகழ்ச்சி முதன்முதலாச்சி
குடிமதிப்பு எழுதிவிட ஆணையாச்சி
பலுகியே மக்கட்தொகை கணக்கிலாச்சி
முதல்நாளின் முதல்ஆண்டிலே சாத்தியமாச்சி

அலைபாயும் உலகிலே அன்பாட்சி
அனைவரும் மகிழ்ச்சியிலே வாழும்ஆட்சி
தலைமை தாங்குவோர் மனசுவச்சி
தலைதூக்க வேண்டுகிறோம் ஒருமிச்சி.

ஆதாரம் : நற்செய்தி, நம்பிக்கை, நடப்புகள்
கவிதை எண் : 225
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.
நீதிமொழிகள் 22:6

வேரில்
நீரூற்றும் பேரில்
தாவரம்
தளிர்விடும்
தளதளவென
வளரும்
உயிர் வாழ்வதும்
உடலுக்கு வளம்
கூட்டுவதும்
உணவு
ஊட்டுவதின் மூலமே.
வளர்ந்து வரும்
பயிருக்கு
களை ஒரு
பாரம்.
களையை
நீக்கும்போது
பலன்
பன்மடங்குதானே....
பைபிளில்
கர்த்தரின்
வாக்குத்தத்தம்
உன் சந்ததியை
பெருகவே
பெருகப் பண்ணுவேன்
பிள்ளைக் கனியமுதை
கர்த்தரின்
சொத்தாய்.. நமது
முத்தாய்
தரணியில்
தவழவைப்போமே...
நற்குணம்...
மனிதரின்
உள்ளத்தை
தூய்மையாக்கும்.

தூய்மை வாழ்வை
வாய்மையாக்கும்
கர்த்தரின்
அருளை
வாய்க்கச் செய்யும்
அன்பரே..
அழகிய
நற்குணம்
இக்கணமே... நமது
குடும்பத்தில்
ஆரம்பிப்போமே...
மன்னன் எவ்வழி
மக்கள் அவ்வழி
அன்றையச் சொல்
பெற்றோர் எவ்வழி
பிள்ளைகள்
அவ்வழி
இன்றைய வாக்கு.
இளம்தளிர் பருவம்
அழுக்கும்
இழுக்கும்
இல்லா
இனிதான
இதயத்தில்
இறை இயேசுவையும்
அவர் போதனையும்
சொல்லித் தந்து
பைபிள் கற்பித்து
அதன்படி நடக்க
வளர்த்துவோமே...
சகோதர...
சகோதரிகளே...
கேளீர்...

நம் கண்மணிகள்
ஐந்திலும்
வளைந்திட
வேண்டும்.
ஐம்பதிலும்
வளைந்திட
வேண்டும்.
கர்த்தரின்
பழுத்த
பக்தனாய்
இயேசுவின்
பொற்பாதத்தில்
ஒப்படைப்போமே...
வையத்துள்
வாழ்வாங்கு
வாழவைப்போமே...
இன்றைய நாள்
இனிய நாள்
புது வருட
ஆரம்ப நாள்.
இயேசுவின்
திருவருள்
ஒளியாய் வந்து
நம் ஒவ்வொரு
குடும்பத்திலும்
மகிழ்ச்சியைத் தந்து
கண்மணிகளுடன்
களித்திருப்போமே..
இயேசுவை
காலமெல்லாம்
துதித்திருப்போமே..

இனிய புதுவருட
வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 15-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Sargunam & Mrs.Sangeetha

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 19-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Berlik Jacob & Mrs.Dyana Stefy

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 23-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Nishetha Jeflin & Mr.Jason

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 26-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Vashni & Mr.Gabriel

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 27-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Anntly Abigail & Mr.Gladson Bini

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 27-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Subin Raj & Mrs.Lara Begerlin

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 30-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Edward & Mrs.Rahila

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 30-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Jobin & Mrs.Sharmi

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 30-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Madhan Alankar & Mrs.Jenisha Oshin

இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# LAST MONTH CHILDRENS CORNER PRIZE WINNER

## Correct answer Participants:

**GRADE 3 TO GRADE 5** 1) Lenofa Joy 2) Sanjay Sumesh 3) Trinita 4) Tiana Paul 5) Renald Moses 6) Bernice 7) Ryan

**GRADE 6 TO GRADE 8** 1) Maisie Fedora

**GRADE 9 AND ABOVE** 1) Nickolyn Nixon 2) Jerusha Rejisan

## Good attempt Participants:

**GRADE 3 TO GRADE 5** 1) J. Ellen Shona 2) Vanna Sujin 3) Hubert Sujin

**GRADE 6 TO GRADE 8** 1) Jerson 2) Gracelin Esther Suresh 3) Jenica Roshan Jebakumar 4) Japhia Johnson (rak) 5) Joel Sumesh 6) Jaymen 7) Jeflin Victo

**GRADE 9 AND ABOVE** 1) Gerald Moses 2) Shauna Kathy Jazlyn

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜனவரி 2020

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-01-2020 | அனைத்து மக்களுக்கும் வெளிப்படுத்தப் பட்ட கடவுள் | ஏசாயா 45:18-25 | வெளிப். 21:22-27 | மத்தேயு 2:1-11 | 98 |
| 10-01-2020 | ஆண்டவரின் ஆலயமாய் உடலை மதித்தல் | பிரசங்கி 6:1-12 | 1 கொரிந். 3:16-23 | மத்தேயு 5:21-30 | 1 |
| 17-01-2020 | ஒற்றுமைக்கான அழைப்பு | எசேக்கியேல் 37:15-23 | எபேசி. 4:1-6 | யோவான் 15:1-12 | 133 |
| 24-01-2020 | பவுலடிகளாரின் மனந்திரும்புதல் | எரேமியா 1:4-10 | அப்போ. 9:1-18 | மத்தேயு 19:27-30 | 67 |
| 31-01-2020 | குறிப்பிடத்தகுந்த திருநங்கையர் | எரேமியா 38:1-13 | அப்போ. 8:26-40 | மத்தேயு 19:10-12 | 33:1-12 |

## பஸ்கா பண்டிகை




நமது திருச்சபையின் 40-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டத்தை கொண்டாட இருக்கின்ற நாம், நமது திருமறையில் கொண்டாடப்பட்ட சில கொண்டாட்டங்களைப் பற்றி சிந்திப்பது, ஆராய்வது இக்காலக்கட்டத்திற்கு ஏற்புடையதாக இருக்கும் என எண்ணியதால், இனி நாம் வரும் மாதங்களில் திருமறையின் கொண்டாட்டங்களையும் அதன் சிறப்புக்களையும் தொடர்ந்து சிந்திப்போம். இன்று யூதர்களின் விடுதலைப் பிரயாணத்தின் தொடக்கத்தில் கொண்டாடப்பட்ட இந்த “பஸ்கா பண்டிகை” பற்றியும் இதன் சிறப்புகள் பற்றியும் நாம் அறிந்துகொள்வோம்.

பஸ்கா (Hebrew: Pesach, pronounce: pay-sock) ஒரு முக்கிய யூத விடுமுறை மற்றும் மிகவும் பரவலாக கொண்டாடப்படும் யூத விடுமுறை நாட்களில் ஒன்றாகும். பஸ்கா, ஷாவோட் (Shavuot) மற்றும் சுக்கோத் (Sukkot) ஆகியவற்றுடன் சேர்த்து பஸ்கா மூன்று யாத்திரை பண்டிகைகளில் ஒன்றாகும். இந்த பண்டிகையின்போது ஒட்டுமொத்த மக்களும் எருசலேமில் உள்ள கோவிலுக்கு யாத்திரை மேற்கொண்டனர். இப்போதும் சமாரியர்கள் கெரிசீம் மலைக்கு யாத்திரை செய்கிறார்கள். ஆனால் ஆண்கள் மட்டுமே பொது வழிபாட்டில் பங்கேற்கிறார்கள்.

எருசலேமில் ஆலயம் இருந்தபோது, பஸ்கா என்பது ஒரு வசந்தகால பண்டிகையாக இருந்தது. இது “வாற்கோதுமை முதற்பழங்களை” செலுத்தும் காணிக்கையுடன் தொடர்புடையது. ஏனெனில் வாற்கோதுமைதான் முதன்முதலில் இஸ்ரவேல் தேசத்தில் அறுவடை செய்யப்பட்ட முதல் தானியமாகும். இப்போது, இது யாத்திராகமத்தில் மற்ற அறுவடைப் பண்டிகைகளுடன் தொடங்கப்பட்டாலும், கடவுளின் மகத்துவத்தால் ஒடுக்குமுறையிலிருந்த இஸ்ரவேல் மக்கள் விடுவிக்கப்பட்டதன் மையக் கதையில் முழுமையாக சம்மந்தப்பட்டது.


யாத்திராகமத்தில் அடிமைத்தனத்திலிருந்த எகிப்திய மக்களை விடுவிக்க தேவன் பத்து வாதைகளை எகிப்தியருக்கும், பார்வோனுக்கும் அனுப்பி, அவர்களை அதிசயவிதமாக விடுவிக்கின்றார். இதில் பத்தாவது வாதையான தலைப்பிள்ளைச் சங்காரத்தின்போது, இஸ்ரவேல் மக்கள் தங்கள் வீடுகளின் வாசல்களில் பஸ்கா ஆட்டுகுட்டியின் இரத்தத்தால் குறிக்கப்பட்டபோது சங்கார தூதன் அவ்வீடுகளை கடந்து சென்றான். இஸ்ரவேல் மக்களின் தலைச்சன் பிள்ளைகள் கர்த்தரால் காக்கப்பட்டனர். எகிப்திலிருந்து, அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றனர். இந்த கொண்டாட்டமே பஸ்கா கொண்டாட்டம்.

பஸ்கா பண்டிகையின் போது சாப்பிடப்படும் உணவு என்னென்ன என்பதையும் அந்த பண்டிகையின்போது உடுத்துக்கொள்ளப்படும் உடையைப் பற்றியும் நம்முடைய வேதாகமத்தில் யாத்திராகமம் 12ம் அதிகாரம் 1-14 வரையுள்ள பகுதியில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பஸ்கா எபிரெய மாதங்களில் முதல் மாதமான ஆபீப் என்ற நிசான் மாதம் 14ம் தேதி நடக்கும் பண்டிகையாகும். இது நம்முடைய காலெண்டரில் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நிகழும்.

எபிரெய பாரம்பரியப்படி புளிப்புள்ள (chametz) எல்லாவற்றையும் இப்பண்டிகையின்போது சாப்பிடாமல், நெருப்பினால் சுட்டெரிக்கப்பட வேண்டும். ரொட்டிக்குப் பதிலாக எபிரெயர்கள் தட்டையான ரொட்டி (matzo) யையே பயன்படுத்துவர் ஏனென்றால் எகிப்திலிருந்து புறப்பட்ட அன்று இவர்களுக்கு மாவை புளிக்கவைக்க நேரம் இல்லாதிருந்தது. அதுமட்டுமல்ல, சாதாரண ரொட்டியை விட இந்த தட்டையான ரொட்டி வனாந்திர யாத்திரையில் சுமக்க எளிதாகவும் இலகுவாகவும் இருந்தது.



(Burning chametz)



(Matzo)

பஸ்கா பண்டிகையின்போது ஒருவரையொருவர் வாழ்த்த "Happy Passover" என்று வாழ்த்தலாம். அதையே எபிரெயத்தில் "Happy Pesach" என்று வாழ்த்தலாம் அல்லது happy festival or happy holidays என்று பொருள்படும் 'chag sameach' என்ற எபிரெய மொழியில் வாழ்த்துதலைப் பரிமாறிக்கொள்ளலாம்.

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

# திருச்சபை ஜெபநாள் 05-01-2020 (முதல் ஞாயிறு)

"தேவனே, என் விண்ணப்பத்தைக் கேட்டு,
என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும்." சங்கீதம் 54:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- நமது ஃபுஜைரா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை மற்றும் நமது எல்லா சபைகளின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை, கிறிஸ்துமஸ் மரவிழா, கிறிஸ்துமஸ், புதுவருட பண்டிகை ஆராதனைகள் யாவும் சிறப்பாகவும், கர்த்தருடைய நாமமகிமைக்காய் நடைபெறவும் கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நமது சபையின் இன்பச்சுற்றுலா சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

"தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்,
என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்." சங்கீதம் 55:1

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# எஸ்தர்

எஸ்தர் என்றால் "நட்சத்திரம்" என்பதுப் பொருள். ஒளி மங்கி, நம்பிக்கை இழந்து நின்ற இஸ்ரவேலரின் வாழ்வில் ஒளி வீசும் நட்சத்திரமாக திகழ்ந்தாள் எஸ்தர். எஸ்தரின் நல்ல குணாதிசயங்கள், அந்நிய நாட்டில் மரணத்தின் வாசல் வரை வந்து நிற்கும் போது எப்படி தேவனுக்காய் நிமிர்ந்து நிற்பது? சவால்களைச் சந்தித்த துணிச்சல் இவை எக்காலத்தும் எல்லா தேசத்துப் பெண்களையும் உணர்வுள்ள நல்ல மங்கையராக மிளிர உற்சாகப்படுத்துகிறது.

1. திருப்தியுள்ள மங்கை: ஆகாஸ்வேரு ராஜாவுக்காகப் பல சௌந்தரியமுள்ளப் பெண்கள் 127 ராஜ்யங்களிலிருந்துக் கொண்டு வரப்பட்டு 6 மாதம் ஜோடிக்கப்பட்டு ராஜாவிடம் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் கொடுக்கப்படும். ஆனால் எஸ்தரோ, தனக்கு நியமித்தக் காரியங்களைத் தவிர வேறொன்றையும் கேட்கவில்லை. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தி மிகவும் தேவையானது. அநேகர் தேவனுக்காக எழும்ப விடாமல் பிடித்துத் தள்ளும் ஒரு சக்தி இந்த திருப்தியின்மையே.

